1984 மார்ச் 20]

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கு மலைத் தொடர்ச்சி அடிவாரத்தில் மேக மலையில் புள்ளிமான்கள், கவரி மான்கள் அதிகமாக இருக்கின்றன. அங்கே சரணாலயம் அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செயற்குறிப்பு உள்ளதாகச் சொன்னார்கள். கவரி மான்களை வேட்டையாடுவதில்லை. அவைகள் தானாகவே மடிந்து விடுகின்றன. மானப்பிரச்சனையால் அவைகள் இறந்து விடுகின்றன. என்ன மானப்பிரச்சனை என்பதைக் கண்டறிந்து அந்த கவரி மான்களைக் காக்க அந்த இடங்களிலே சரணாலயம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மேக மலைப் பகுதி ஒரு சிறந்த வனப் பகுதி. அங்கே வன விலங்குகள் சரணாலயம் அமைக்கலாமா என்பது பற்றிய கருத்து வனத் துறையிடமிருந்து பெறப்பட்டு, அது இப்போது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 355, 356, 357, 358, 359 ஆகியவை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளிவைக்கப்படுகின்றன.

வீரசோழனில் அரசு மருத்துவமனை கட்டிடம் கட்டும் திட்டம்

360—(*வினா எண். 8054)—திரு. எம். பிச்சை : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அருப்புக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் உள்ள வீரசோழனில் அரசு மருத்துவ மனை கட்டிடம் கட்ட ரூபாய் 10,000 (பத்தாயிரம்) பொதுமக்கள் நிதியாகக் கட்டியும் இன்னும் கட்டிட வேலை துவங்கப்படவில்லை என்பது உண்மையா

(ஆ) அப்படியானால் தகுந்த நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) 3·10 ஏக்கர் புறம்போக்கு நிலம் வருவாய்த் துறையிடமிருந்து மருத்துவத் துறைக்கு மாற்றப்பட்டுள்ளது. அங்கு கட்டிடம் கட்டும் செயற்குறிப்பினை இனி பரிசீலனை செய்யலாம்.

[1984 மார்ச் 20

திரு. எம். பிச்சை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருப்புக்கோட்டையில், வீரசோழனில் ஒரு அரசு மருத்துவ மனை இருக்கிறது. அதற்காக மக்கள் பங்குத் தொகையாக ரூ. 10,000 செலுத்தியுள்ளார்கள். இடமும் ஆர்ஜிதம் செய்யப் பட்டு கொடுக்கப்பட்டிருக்கிறது. அங்கே கிராமமாக இருக்கின்ற காரணத்தினால், வாடகைக் கட்டிடம் கூட கிடைக்காத சூழ் நிலை இருக்கிறது. அரசு மருத்துவமனை டாக்டர்கள் அங்கே வந்து தங்குவதற்கு விரும்பாத சூழ்நிலை இருக்கிறது. எனவே, உடனடியாக அங்கே ஒரு மருத்துவமனை கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக, உடனடியாக அதுபற்றி பரிசீலனை செய்யப்படும்.

தமிழகத்தில் நீரிழிவு நோயால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை

361—(*வினா எண். 15685)—திரு. பி. எம். தங்கவேல்ராஜ். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் நீரிழிவு நோயால் எவ்வளவு பேர் பாதிக் கப்படுகிறார்கள் ?

(ஆ) நோயைத் தடுக்க சினிமா மூலம் பிரச்சாரமும் மற்றும் முகாம் நடத்தி சிகிச்சை அளிக்கும் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) தமிழ் நாட்டில் நூற்றுக்கு 2 முதல் 4 பேர்கள் நீரிழிவு நோயினால் பாதிக்கப் படுகிறார்கள்.

(ஆ) நோயைத் தடுக்க சினிமா மூலம் பிரச்சாரம் செய்யப் படவில்லை. ஆனால் சில பகுதிகளில் பிரதி மாதம் அரிமா சங்கம், மற்றும் பிற சமூக நல சங்கங்கள் வாயிலாக நீரிழிவு நோய் கண்டு பிடிப்பதற்கு முகாம்கள் நடத்தி, சிகிச்சை அளிக்கப்பட்டு வரு கிறது.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டயாபெடீஸ் வியாதிக்கு சித்த வைத்தியம் சிறந்தது என்று சொல்கிறார்கள். எனவே, அதுபோன்ற சித்த வைத்தியத்தை ஊக்கப்படுத்தும் முறையில் ஒவ்வொரு மருத்துவ மனையிலேயும், அல்லது எங்கே அந்த நோய் அதிகமாக இருக் கிறதோ அங்கேயும் உடனடியாகச் சித்த வைத்திய நிலையத்தை அமைப்பதற்கு அரசாங்கம் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.